**தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஒய்வூதியத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, ஒய்வூதியத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து

பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமான பெறுவனவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கொழும்பு கல்வி வலய அலுவலகத்திலிருந்து 2021 ஏப்ரல் மாதத்திற்குரிய பங்களிப்புப் பணமாக 2021 யூன் 25 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற ரூபா 2,904,049 வருமானம் 20.04.02.00 (மாகாண சபை) கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மாகாண சபை வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து 2021 ஏப்ரல் மாதத்திற்குரிய 2021 யூன் 25 ஆந் திகதி கிடைத்த ரூபா 2,904,049 தொகை தவறுதலாக 20.04.02.00 (மாகாண சபை) தலைப்பிற்குரிய மேல்மாகாணத்தின் கீழ் PIV இலக்கம் 11/710 ஆக வருமானத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அந்தத் தவறு சரிசெய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியான வருமானத் தலைப்பில் வருமானம் சேர்க்கப்படல் வேண்டும். |
| (ii) | வருமானத்தலைப்பு 2002-0-1-0-1-0 (வாடகை வருமானம்) திறைசேரி கணனி குறிப்பின் பிரகாரம் ரூபா 32,000 வரவு பதிவொன்றும், ரூபா 46,345,321 செலவு பதிவொன்றும் ஆக ரூபா 46,313,321 மீதி காணப்பட்ட போதிலும் கணக்குப் பொழிப்பில் அது ரூபா 32,000 வரவு மீதியொன்று மாத்திரம் ஆனமையால் | மாதாந்த கணக்கு அறிக்கையின் பிரகாரம் 2002-0-1-0-1-0 வாடகை வருமானமாக ரூபா 32,000 வரவு பெறுமதியொன்றும், ரூபா 46,345,320 செலவுப் பெறுமதியொன்றும் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் இந்த பெறுமதி சரியாக உள்ளடக்கப் | வருமானம் PIV மூலம் பேரேட்டில் பதியப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 46,345,321 வருமானம் PIV இல் குறிப்பிடப்பட்ட போதும் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பட்டுள்ளதுடன் அந்தப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | |

**(ஆ) மீண்டெழும் செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 ஒக்தோபர் மாதத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 40,000 கணனி மதியுரைக் கட்டணம் 253-1-1-1002 (மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம்) செலவினத் தலைப்பில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் தரவுகளை உள்ளடக்கும் போது 1003 செலவின விடயத்தில் உள்ளடக்க வேண்டிய ரூபா 40,000 தொகை தவறுதலாக 1002 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1003 செலவின விடயத்தின் கீழ் ரூபா 187,946 நிதியேற்பாடு சேமிக்கப் பட்டிருந்தமையால் நிதியேற்பாட்டை விஞ்சியிருக்கவில்லை. | சரியான செலவினத் தலைப்பில் வரவு வைக்கப்படல் வேண்டும். |
| (ii) | உள்நாட்டு பிரயாணச் செலவின நிதியேற்பாடு ரூபா 4,000,000 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி குறிப்பின் பிரகாரம் செலவினம் ரூபா 176,178 ஆகவும், பேரேட்டின் பிரகாரம் செலவினம் ரூபா 238,938 ஆகவும் இருந்தமையால் ரூபா 62,760 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மாதாந்த கணக்கு அறிக்கைகளின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்படுகின்ற ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் செயற்திட்டம் 1 இற்காக உள்நாட்டு பிரயாணச் செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 238,938 வரவு மீதியும், ரூபா 62,760 செலவு மீதியும் குறிப்பிடுவதுடன் அதன் பிரகாரம் இறுதி தேறிய மீதி ரூபா 176,178 ஆகும். இப்பெறுமதி இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்குகள் மற்றும் திறைசேரிக் கணனி குறிப்புக்கள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

**(இ) மூலதன செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களை கைப்பற்றல் (253-1-1-2103) இன் கீழ் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்த போதும், ரூபா 370,000 தொகையான கணனிகளை கொள்வனவு செய்தல் அந்த செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2509 இன் கீழ் நிதியேற்பாடு தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் கணனிகளை கொள்வனவு செய்வதற்கு இந்த செலவின விடயத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்தது. 2103 இன் கீழ் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரியான செலவினத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி கணனி அறிக்கை (SA 80) இன் பிரகாரம் 2021.12.31 இல் உள்ளவாறு இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் மீதி ரூபா 228,365,377 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 234,163,467 (கணனி குறிப்பில்) ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களில் ரூபா 5,798,090 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாடுகளை சரிசெய்வற்காக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் விநியோகிக்கப்பட்ட முதலாவது கணக்கு பொழிப்பின் பின்னர் நாட்குறிப்பு பதிவுகள் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது பொதுத் திறைசேரியினால் சரிசெய்யப்படாமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது இது நாட்குறிப்பு பதிவுகளின் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரி கணனி அறிக்கை மற்றும் கணக்குகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்போது திணைக்கள வளவில் வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுகின்ற 07 நிறுவனங்களிலிருந்து ரூபா 3,371,323.23 நிலுவை வாடகை வருமானமொன்று நிலுவையாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 632,777 தொகை 12 மாதங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டிய வருமானம் ரூபா 1,121,485 ஆகும். மிகுதி 2022 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் சேகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக சேகரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்படுகின்ற இலங்கை வங்கி - டெலர் இயந்திரம் அமைந்துள்ள பகுதி மற்றும் 2021 மே 17 ஆந் திகதி முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - II பகுதி என்ற நிறுவனங்களிலிருந்து வாடகை வருமானம் சேகரிக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை வங்கியின் டெலர் இயந்திரத்திற்காக உடன்படிக்கை செய்தல் மற்றும் கட்டிட வாடகையை அறவிடல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - II பகுதிக்காக மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன் வாடகை உடன்படிக்கையை தயாரித்து நிலுவை வாடகையுடன் கட்டிட வாடகையையும் அறவிடுவதற்கு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானம் விரைவாக சேகரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கையின் பிரகாரம் மக்கள் வங்கியின் டெலர் இயந்திரம் நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 65,000 ஆக இருந்த | இரு தரப்பினராலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 30,000 வாடகைப் பணம் தொடர்ச்சியாக அறவிடப்பட்டிருந்தது. எனினும் வாடகை | மதிப்பீட்டுப் பெறுமதி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் மாதாந்த வாடகையாக ரூபா 30,000 வாடகைப் பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கைக்கு மேலதிகமாக "மேலதிக புரிந்துணர்வு உடன்படிக்கை" கைச்சாத்திட்டு வாடகை உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கும், புதிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் எதிர்காலத்தின் போது பெறப்படுகின்ற மதிப்பீட்டு அறிக்கைகளின் பெறுமதிகளை அமுல்படுத்தும் வகையில் வாடகை உடன்படிக்கை திருத்த வேண்டியமையும், அதன் பிரகாரம் வாடகைப் பணம் செலுத்த வேண்டியிருந்தமையும் பெற்ற தரப்பினரான மக்கள் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு பதில் எதிர்பார்க்கப்பட்டுள்ள துடன் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2001 சனவரி 15 ஆந் திகதி 1/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 1(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாத கணக்குப் பொழிப்பின் பிரகாரம் வரவு மற்றும் செலவில் இடப்பட்ட பங்களிப்புப் பணம் தொடர்பான அறிக்கையொன்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலவு வைக்கப்பட்ட ரூபா 22,595,155,044 பங்களிப்பு பணம் தொடர்பான | உரிய நிறுவனத்திலிருந்து வரவு அறிவித்தல்கள் கோரி அனுப்புதல் மற்றும் மீள் நினைவூட்டல் மூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வரவு வைக்கின்ற நிறுவனத்தின் பொறுப்பாகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,339,620 வரவு வைத்தல்களில் ரூபா 19,569,428 வரவு வைத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களிலிருந்து வரவு அறிவித்தல் பெறப்படாதிருந்ததுடன் அதற்காக மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டிருந்த போதிலும் தாமதமடைந்திருந்தது. | | |
| (உ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய வருமானக் குறியீட்டுக்காக மாதாந்த அறிக்கை அடுத்து வரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதிக் கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாதாந்த செயலாற்றல் அறிக்கை 10 நாட்களுக்கும் 221 நாட்களுக்கும் இடையிலான தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மாதாந்த அறிக்கை திறைசேரிக் கணக்கு கூற்றுக்களுடன் இணக்கம் செய்யப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படுவதாகவும், திறைசேரிக் கணக்கு கூற்றுக்கள் இணையதளத்திற்கு விடுவிப்பதற்கு தாமதமடைந்தமைக்கு COVID 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பணிகள் முடங்கியதால் மாதாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மத்திய அரசாங்கத்தினதும், மாகாண சபை உத்தியோகத்தர்களினதும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணம் (விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பணம்) தொடர்பான தரவு முறைமையொன்றை பேணிச் செல்வதற்கு ஓய்வூதியத் திணைக்களம் | சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்றை வடிவமைக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2017 ஒக்தோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்பு | பங்களிப்பாளர்கள் மற்றும் பங்களிப்பு செலுத்துதல் தொடர்பான தரவு முறைமையொன்றை பேணிச் சென்று பங்களிப்பு பணம் குறித்த ரீதியில் பெறப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதனால் சமூக பாதுகாப்பு முறைமையின் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு குறித்துரைத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் காணப்படாமையால் அதன் பிரகாரம் உரித்தாகின்ற விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் மற்றும் பங்களிப்புப் பணம் மீள செலுத்ததல் போன்ற நலன்களின் உரித்தை பெற்றுக்கொள்ளும் போது பங்களிப்புப் பணம் குறித்த ரீதியில் தொடர்ச்சியாக பெறப்பட்டிருந்ததா என திணைக்களத்தில் உறுதிப்படுததிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | காணப்படாமையால் மந்தகதியில் இருந்தது. தற்போது விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்புப் பணம் அறவிடல் தொடர்பான விபரங்களை ஆளணிக் கோவையில் உள்ளடக்குதல் தொடர்பாக சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2021 சனவரி 15 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையினால் சகல அலுவலகங்களினதும் பங்களிப்பு பணத்திற்காக ஒரு காசோலை விநியோகிக்கப்பட்டிருக்கு மாயின் ஒவ்வொரு மாதத்தினதும் அறவிடல்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். எனினும், ஆகக் குறைந்தது அடுத்து வரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் காசோலை பெறப்படாதிருந்த 05 மாகாண சபைகளில் 06 நாட்கள் முதல் 33 நாட்கள் வரையான காலதாமதத்துடன் காசோலைகள் பெறப்பட்டிருந்தது. | பங்களிப்பு பணம் சம்பளம் செலுத்தும் போது ஒதுக்கப்படுகின்றமையால் 20 ஆந் திகதி வரை காலம் பெறப்பட்டிருந்ததுடன் தாமதமான சந்தர்ப்பங்களில் தொலைபேசி மற்றும் கடிதம் மூலம் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கடிதம் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், நிதி ஆணைக்குழுவிற்கும் உங்கள் அலுவலகத்திற்கு பிரதியுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. பணத்தை உரிய பிரகாரம் அனுப்புதல் ஏனைய சகல அரசாங்க நிறுவனங்களினதும் பொறுப்பாகும். இதற்கு மேலதிகமாக COVID 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2021 ஆம் ஆண்டின் போது தொடர்ச்சியாக கடமைகள் மேற்கொள்ளுதல் வீழ்ச்சியடைந்தமையும் இதற்கு காரணமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | ஊவா மாகாண சபை ஒவ்வொரு மாதத்திற்குமுரிய பங்களிப்பு பணத்தை மதிப்பீடு செய்து காசோலை மூலம் செலுத்தியிருந்த போதிலும் உரிய மாதத்திற்குரிய நிலுவைப் பணம் அல்லது மேலதிகப் பணத்தை சீராக்குதல் 05 நாட்கள் 133 நாட்கள் வரையான தாமதக் காலத்தை எடுத்திருந்தது. | விரைவாக காசோலைகள் அனுப்பப்பட வேண்டியமையால் மாதாந்த கணக்கு பொழிப்பில் பிழைகளை சரிசெய்யும் வரை மதிப்பீட்டுப் பெறுமதி அனுப்பப்படுவதுடன் பின்னர் பிழைகள் சரிசெய்யப்பட்டவுடன் பெற வேண்டிய மிகுதிப் பணத்தை அனுப்பியமையால் காலதாமதம் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | செலவின விடய இலக்கம் 253-1-1-1102 (வெளிநாட்டு பிரயாண செலவினம்), 253-1-1-2507 (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம்) மற்றும் 253-1-1-1508 (ஏனைய மாற்றல்கள்) செலவின விடயங்களில் ரூபா 5,900,000 ஆன மொத்த நிதியேற்பாட்டில் ஆண்டில் எந்தவொரு செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கிடையே வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் 1508 செலவின விடயத்தின் கீழ் ஓய்வூதிய தினத்திற்காக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டம், அரச கொள்கையின் அடிப்படையில் விழாக்கள் இரத்துச் செய்யப்பட்டமையால் நடாத்தப்படாதிருந்த மையால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு யாவும் ஆண்டின் இறுதி வரையும் சேமிப்பாக காணப்பட்டது. | சரியாக செலவினங்களை இனங்கண்டு மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மூலதன செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் நாட்டில் காணப்பட்ட மோசமான நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்டிருந்த பிரகாரம் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் 2507 செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு யாவும் ஆண்டின் இறுதி வரையும் சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) 21 செலவின விடயங்களில் ரூபா 134,350,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் 42 சதவீதம் அதாவது ரூபா 56,418,627 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக 8 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | 8 சதவீதம் முதல் 69 சதவீதம் வரை நிதியேற்பாடு சேமிக்கப்பட்டுள்ள 18 செலவின விடயங்களில் 11 விடயங்கள் மீண்டெழும் செலவின விடயங்களாக இருந்ததுடன் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக தொடர்ச்சியாக அலுவல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, மேலதிக நேர, பிரயாணச் செலவினம், காகிதாகிகள் செலவினம், பராமரிப்பு செலவினம் என்பன வரையறுக்கப்பட்டமையின் காரணமாக இந்த நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | சரியாக செலவினங்களை இனங்கண்டு மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் செலுத்த வேண்டிய பணிக்கொடையாக ரூபா 1,339,365,568 காண்பிக்கப்பட்ட போதிலும் அதில் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பொறுப்புக்கள் பதிவேட்டில் ரூபா 198,367,277 பெறுமதி 2022 ஆம் ஆண்டிற்குரியதாக | பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 155,531,324 தொகை 2022 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் ஆகும். மேலும் 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி வரை செலுத்தப்பட்ட 2021 திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 191,594,939 தொகையை செலுத்துதல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 36,063,615 இனால் பொறுப்புக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காண்பிக்கப்பட்ட போதும், P2022/15 மற்றும் P2202/16 என்ற உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 62,356,876.47 தொகை 2021 ஆம் ஆண்டிற்குரியதாகும். மிகுதி 17 உறுதிச்சீட்டுக்களினதும் பெறுமதி ரூபா 136,010,400 இல் மரண பணிக்கொடை மற்றும் ஊழியர் பணிக்கொடையை செலுத்துதலை உள்ளடக்கியுள்ளதுடன் இந்த செலவினமும் 2021 ஆம் ஆண்டிற்குரியதாக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டிலேயே அறிக்கைகள் பெறப்பட்டிருந்தமையினால் 2022 ஆம் ஆண்டின் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2011 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 3/1719 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | - | பிறப்பிலேயே முழுமையாக அங்கவீனம் அடையாதவர்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மருத்துவ சபைக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் குருணாகல் பிரதேச செயலகத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | ஓய்வூதிய இலக்கம் 24-205598 என்ற அவரை மீண்டும் ஒரு தடவை மருத்துவ சபைக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. 24-107014 என்ற ஊனமுற்ற ஓய்வூதியதாரர் 2022.01.26 ஆந் திகதி மரணமடைந்திருந்தது டன் அவரின் ஊனமுற்ற ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) நிதிப்பிரமாணக் கோவை

-------------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(ஈ) | 5,785 | செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய பணி நிறைவேற்றப்பட்டதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 09 சந்தர்ப்பங்களின் போது 04 உத்தியோகத்தர் களுக்கு ஒரு முற்பணம் வழங்கி தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 103, 104 | 113,846 | ஓய்வூதிய இலக்கம் 57-966 இன் கீழ் செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் படி, தங்கியிருப்போர் படியாக மாற்றீடு செய்த போது ரூபா 470,496 மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அதில் மேலும் அறவிட வேண்டிய தொகையை உரிய ஓய்வூதியம் பெறுபவர் மரணமடைந்த 2021 பெப்ரவரி மாதம் வரையிலும் அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணத்தை அறவிடல் தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்திலிருந் து ஆலோசனை கோரி 2022.04.08 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645(அ) மற்றும் 1646 | - | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு உரிய மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 15 வாகனங்களில் 06 வாகனங்கள் 8-12 | உரிய ஓட்ட அட்டவணை 2022 பெப்ரவரி 14 ஆந் திகதி கணக்காய்வு நடவடிக்கை களுக்காக கையளிக்கப் பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மாதங்களுக்கு இடையிலான காலத்திற்காக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | அரச நிர்வாக சுற்றறிக்கை<br>-------------------------- | | | | |
| (i) | 2016 பெப்ரவரி 25 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 | 465,500 | 2016 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வூதியம் பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு இடைக்காலப்படி உரித்தில்லாதிருந்த போதும் பொல்கஹவெல, மாதம்பை பிரதேச செயலகங்களுக்குரிய நான்கு ஓய்வூதிய தாரர்களுக்கு இடைக்காலப்படி செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதிய தரவு முறைமையின் பிரகாரம் ஓய்வூதிய இலக்கம் 50-1179246 என்ற ஓய்வூதிய இலக்கம் பொல்கஹவெல பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படவில்லை. மாதம்பை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஓய்வூதியதாரரின் சம்பளம் ஒன்றிணைக்கப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2019 மே மாதம் 30 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2/2019 இன் 04 ஆம் பிரிவு | - | பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள பிரமாணங்களை உள்ளடக்கிய கைநூலின் 292 ஆம் கட்டளையின் பிரகாரம் அரசாங்கத்திலிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற நபர்களின் மரணமொன்றை பதிவு செய்யுமிடத்து அது தொடர்பாக பீ 73 என்ற படிவத்தில் எழுதி வாரத்திற்கு ஒரு தடவை அதன் பிரதியொன்று பிரதேச செயலாளருக்கு அனுப்புமாறு உரிய அதிகாரப் பிரதேசத்தின் பதிவாளருக்கு ஆலோசனை வழங்க வேண்டியிருந்த | கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் ஓய்வூதிய தாரர் மரணமடைந்த சந்தர்ப்பத்தில் பீ “73” அறிக்கை மூலம் பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட பதிவாளருக்கு அறிவிக்குமாறு அரச நிர்வாக சுற்றறிக்கை 2019 மே 30 ஆந் திகதிய 02/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 21/2013 | - | வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் அதன் பிரகாரம் உரிய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு திணைக்கள தலைவரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் அங்கீகாரம் பெறப்பட்ட 09 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அத்தியவசிய கடமைகளை தொடர்ச்சியாகவும் விரைவாகவும் நிறைவேற்றுவதற்கு வேண்டி ஏற்பட்டமையால் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வார இறுதி விடுமுறை தினங்களில் கடமைகளுக்காக ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். அண்மையில் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த திகதிகளில் அத்தியவசிய கடமைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. எழுதுவினைஞர்கள் தேவையான அடிப்படையில் அலுவலகங்களுக்கு வரவழைக்கப் பட்டமையினால் கடமைகளில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த விண்ணப்பங்கள் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | ஓய்வூதியத் திணைக்கள சுற்றறிக்கை<br>------------------------ | | | | |
| (i) | 2018 யூன் 20 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 06(b) பந்தி | 30,500 | வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியதாரர் களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 2,000 ஆக இருக்க வேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும் வெளிநாடு சென்றுள்ள இலக்கம் 3-1310842, 3-135507 மற்றும் 03-1173669 என்ற இலக்கம் கொண்ட ஓய்வூதியதாரர்களுக்கு ரூபா 3,525 வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்பட்டமையால் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 03-1310842 -2021 திசெம்பர் மாதம் முதல் கொடுப்பனவுகள் சரி செய்யப்பட்டுள்ளது.<br><br>3-135507- இந்த இலக்கத்தில் வெளிநாட்டு ஓய்வூதியம் செலுத்தப்படாததுடன் பலாங்கொட பிரதேச செயலகத்தில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.<br><br>3-1173669 - 2021 யூலை மாதம் முதல் இந்த ஓய்வூதியதாரரின் ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ள துடன் வெளிநாட்டு ஓய்வூதியம் செலுத்ததல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேலதிக செலுத்துதல்கள் அறவிடப்படும். | - மேற்படி - |
| (ii) | 2014 ஏப்ரல் 07 ஆந் திகதிய இலக்கம் 01/2011 திருத்தப்பட்ட (1) என்ற ஓய்வூதிய சுற்றறிக்கை | - | ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாடுகளை முறைமைப்படுத்து வதற்காக மாதாந்த ஓய்வூதிய செலவின ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சேர்த்தல்கள், குறைத்தல்களின் திருத்தங்களை உள்ளடக்கிய அறிக்கை மாதாந்தம் தயாரிக்கப்பட்டு திணைக்கள தரவு முறைமையில் கட்டுப்பாட்டு கணக்குகளுடன் இணக்கம் செய்ய கூடிய | சகல ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் திருத்த செயற்பாடுகள் மத்தியப்படுத்தப்பட்ட தரவு முறைமையில் மேற்கொள்கின்ற மையால் தற்போது காணப்படுகின்ற அந்த கொடுப்பனவு நடைமுறைகளின் பிரகாரம் பிரதேச செயலகங்களில் தனியான கட்டுப்பாட்டு கணக்கு பேணிச் செல்வதற்கு சில வசதியீனங்கள் காணப்பட்டமையால் அந்த வேறுபாடுகளை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திட்டமுறைமையில் கட்டுப்பாட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் குருணாகல், குளியாப்பிட்டி (மேற்கு), மாதம்பை, ஜா-எல, பொல்கஹவெல பிரதேச செயலகங்கள் அவ்வாறு மேற்கொள்ளப்படா திருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இனங்கண்டு கட்டுப்பாட்டு கணக்குகளை தயாரித்தல் பிரதேச செயலாளரின் பொறுப்பாகும். அதன் பிரகாரம் குருணாகல், குளியாப்பிட்டி (மேற்கு), மாதம்பை என்ற பிரதேச செயலகங்களில் தற்போது கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது ஜா-எல பிரதேச செயலகம் எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுக் கணக்கை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். பொல்கஹவெல பிரதேச செயலகம் 2022 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் கட்டுப்பாட்டுக் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது | |
| (iii) | 2009 சனவரி 07 ஆந் திகதிய 1/2009 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | - | ஊனமுற்ற பிள்ளைகளுக்கு ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கைகளின் மேற்பார்வை முழுமையாக கிராம உத்தியோகத்தருக்கு கையளிக்க வேண்டியிருந்ததுடன் சரியான பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்கின்றமையை கிராம உத்தியோகத்தர் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். அது தொடர்பாக | குருணாகல் பிரதேச செயலகம் இதிலிருந்து மும்மாத அறிக்கை பெறுவதாக பிரதேச செயலாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது. உடுபத்தாவ பிரதேச செயலகத்திற்குரிய அறிக்கை, மாதம்பை பிரதேச செயலகத்தின் மும்மாத அறிக்கையை வழங்குமாறு உரிய படிவங்களுடன் கிராம | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அந்தந்த ஊனமுற்றவர்களின் கோவைகளில் மும்மாத அறிக்கை கோவையில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் குருணாகல், உடுபத்தாவ, மாதம்பை, குளியாப்பிட்டி (மேற்கு) என்ற பிரதேச செயலகங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக பிரதேச செயலாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலகம் அந்த அறிக்கை மும்மாத ரீதியில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (iv) | 2019 யூன் 11 ஆந் திகதிய 1/2019 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | - | 2021 இன் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 2017 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் களுக்கு அரச நிர்வாகச் சுற்றறிக்கை 3/2016 இன் பிரகாரம் ஓய்வூதிய சீராக்கம் 2019 யூலை 01 ஆந் திகதி முதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் குருணாகல், உடுபத்தாவ, குளியாப்பிட்டி (மேற்கு), மாவத்தகம, மல்வப்பிட்டி, பொல்கஹவெல பிரதேச செயலகங்களில் தெரிவுப் பரிசோதனையின் போது 181 ஓய்வூதிய தாரர்களுக்காக உரிய திருத்தங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மல்லவப்பிட்டி பிரதேச செயலகத்தில் 52 கோவைகளின் தகவல்கள் தரவு முறைமையில் இல்லாமையின் காரணமாக திருத்தங்களை மேற்கொள்ள | தற்போது சில ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் ஓய்வூதியக் கோவையின் குறைபாடுகள் (கையளித்தல் பத்திரம் காணப்படாமை, சரியான சம்பளம் கணிப்பிடப்படாமை, தற்காலிக கோவைகளை அங்கீகரித்துக் கொள்ளாமை போன்றன) காணப்படுகின்ற மையால் அவற்றை பூர்த்தி செய்ததன் பின்னர் உரிய திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது . அந்த குறைபாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக ஓய்வூதியதாரர்களுக் கும், ஆவணங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களுக்கும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | முடியாதிருந்தது. | கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது | |
| (v) | 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 8/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 10 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | 2,899,825 | அரச ஊழியர் ஒருவர் பெறுகின்ற ரூபா 7,800 வாழ்க்கைச் செலவுப் படியை விஞ்சி ஓய்வூதியதாரருக்கு வாழ்க்கைச் செலவுப் படி செலுத்த முடியாதிருந்த போதும் மரணமடைந்த 10 கடற்படை வீரர்களுக்கு படைவீரர் சம்பளத்துடன் ரூபா 7,800 வாழ்க்கைச் செலவுப் படியும், இராணுவ விதவைகள் ஓய்வூதியம் அல்லது தங்கிவாழ்வோர் படியுடன் ரூபா 3,525 வாழ்க்கைச் செலவுப் படியும் செலுத்தப்பட்டமையால் வாழ்க்கைச் செலவுப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியை எதிர்வரும் மாதங்களில் தவணையாக அறவிடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | - மேற்படி - |
| (vi) | 2014 நவம்பர் 03 ஆந் திகதிய 13/2014 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | 1,028,000 | சில ஓய்வூதியங்கள் இணைத்து பெறப்படும் போது ஒன்றிணைந்த ஓய்வூதியத்திற்கு மாத்திரம் இடைக்காலப் படி செலுத்த வேண்டியிருந்த போதிலும் மல்லவப்பிட்டி பிரதேச செயலகத்தில் 11 ஓய்வூதிய தாரர்களுக்கும், உடுபத்தாவ பிரதேச செயலகத்தில் ஒரு ஓய்வூதியதாரருக்கும் முறையே ரூபா 759,000 தொகை மற்றும் ரூபா 269,000 இடைக்காலப் படியாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மல்லவப்பிட்டி பிரதேச செயலகத்தின் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட 11 உத்தியோகத்தர் களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட இடைக்காலப்படி மே மாதம் முதல் ஓய்வூதியத்திலிருந்து அறவிடுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 மே 27 ஆந் திகதி வரையில் உடுபத்தாவ பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 40-3020 இற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட மொத்தப் பணம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா 271,500 ஆகும். 2022 மே மாதம் வரையில் ரூபா 35,000 அறவிடப்பட்டுள்ள துடன் மேலும் அறவிடுவதற்குள்ள பணம் ரூபா 236,500 ஆகும். | |
| (vii) | 2013 திசெம்பர் 03 ஆந் திகதிய 6/2013 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 2011 யூன் 14 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை கடிதத்தின் இலக்கம் 02 இன் படி | 1,216,453 | செலுத்தப்படாத ஓய்வூதியங்களை குறித்த மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 15 நாட்களுக்கும் 70 நாட்களுக்கும் இடையிலான தாமதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 2020 நவம்பர் 18 ஆந் திகதிய PEN/ACC/43 ஆம் இலக்கத்தின் பிரகாரம் செலுத்தப்படாத ஓய்வூதியம் நேரடியாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் பேரில் உள்ள திணைக்களத்தின் உத்தியோகபூர்வ கணக்கிற்கு பணத்தை செலவு வைக்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது | - மேற்படி - |
| (viii) | 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய 05/2015(11) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | - | ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் பிரகாரம் சீராக்கப்பட்ட திருத்தப்பட்ட ஓய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 3,525 ஆக இருத்தல் வேண்டும். எனினும், விதவைகள் ஓய்வூதியம் பெற்றதிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற 12 ஓய்வூதியதாரர் களுக்காக சிவில் ஓய்வூதியத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்திகதி முதல் விதவைகள் ஓய்வூதியத்திற்கு உரித்தான வாழ்க்கைச் | 21-1000024, 22-200700, 22-1000062 மற்றும் 21-1000072 என்ற ஓய்வூதியதாரர் களுக்காக 2022 சனவரி மாதம் முதல் நிலுவை சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்துதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. 21-6000074 மற்றும் 21-1000039 என்ற ஓய்வூதிய தாரர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி செலுத்துவதற்காக நிலுவை சம்பளமும் தயாரிக்கப்பட்டு ஓய்வூதிய | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செலவுப் படி செலுத்தப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் குறைபாடுகள் காணப்பட்டமையால் செலுத்தப்பட்டிருக்க வில்லை. சரிசெய்து 2022 யூன் மாதம் முதல் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. | |
| (ix) | 2016 பெப்ரவரி 25 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவு | 112,000 | ஓய்வூதிய இலக்கம் 58-1265318 என்ற ஓய்வூதியதாரர் 2016 மார்ச் 28 ஆந் திகதி ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். 2016 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வுபெறுகின்ற உத்தியோகத்தர் களுக்கு இடைக்காலப் படி உரித்தில்லாதிருந்த போதும், இந்த உத்தியோகத்தருக்கு 2019 பெப்ரவரி 08 முதல் 2021 திசெம்பர் 31 வரை இடைக்காலப் படி செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதிய இலக்கம் 58-1265318 என்ற ஓய்வூதியதாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட இடைக்காலப் படி 2022 ஏப்ரல் மாதம் முதல் அறவிடப்படுகின்றது. | - மேற்படி - |
| (x) | 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை கடித இலக்கம் 4 இன் (iv) ஆம் பிரிவு | - | ஆரம்பக் கோவை உரிய நிறுவனத்திலிருந்து பிரதேச செயலகத்திற்கு 03 மாத காலத்திற்குள் அனுப்ப வேண்டிய போதிலும் பூஜாபிட்டி பிரதேச செயலகத்திற்கு நீண்டகால தாமதத்தின் பின்னர் அனுப்பப்பட்ட 02 கோவைகளும், பூஜாபிட்டி மற்றும் பொல்கஹவெல பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பெறாத 09 கோவைகளும் காணப்பட்டன. எனினும் அது தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | பூஜாபிட்டி பிரதேச செயலகத்திற்கு தற்போது கோவைகள் யாவும் கிடைத்துள்ளதுடன் இதன் பின்னர் எதிர்காலத்தில் இவ்வாறான கோவைகள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும் என பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>பொல்கஹவெல பிரதேச செயலகத்திற்குரிய கோவைகள் யாவும் ஓய்வூதியத் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பெறுகைகள் கைநூலின் 8.7.1 மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 | 3,965,576 | ரம்பொட ஓய்வூதியதாரர் விடுமுறை விடுதியின் திருத்த நடவடிக்கைகள், பாதுகாப்பு கருங்கல் சுவர் மற்றும் வலைவேலி நிர்மாண ஒப்பந்தம் கையளித்தல் கடிதத்தில் வேலை ஆரம்பிக்கும் திகதி, செயலாற்றல், பிணை முறியின் பெறுமதி மற்றும் பிணை முறி பெற வேண்டிய திகதி என்பன உள்ளடக்கப்படாதிருந்த துடன் மாதிரிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு நிபந்தனைகளுக்கு இணங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டு வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழ் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | நிர்மாண ஒப்பந்தம் கையளித்தல் கடிதத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி, செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதி மற்றும் பிணைமுறி வழங்க வேண்டிய திகதி என்பவற்றை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் பட்டியல் மற்றும் ஆற்றப்பட்ட வேலைகளை பரீட்சித்து உறுதிப்படுத்தப் பட்டதன் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின் றது. அதனால் தனியான வேலை பூர்த்தி செய்தல்களின் உறுதிப்படுத்தல் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் கைநூலின் 8.7.1 மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.5 மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதியதாரர் மரணமடைந்ததன் பின்னர் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட பணம் உடனடியாக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் | 2020 நவம்பர் 18 ஆந் திகதிய கடிதத்தில் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | மரணமடைந்ததன் பின்னர் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட பணம் உடனடியாக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் குருணாகல் பிரதேச செயலகத்தில் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 92,166 தொகை வேறொரு தரப்பினரால் பெறப்பட்டிருந்தது. | | வேண்டியிருந்ததுடன் உரிய ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மோசடியாக பெறப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மல்லவப்பிட்டி பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 1-403699, 21-75013 மற்றும் 1-504248 என்ற ஓய்வூதியதாரர்கள் மரணமடைந்ததன் பின்னர் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட பணம் உடனடியாக பெறப்படாமையால் வேறொரு தரப்பினரால் அந்தப் பணம் பெறப்பட்டதன் காரணமாக ரூபா 6,392 மேலதிக கொடுப்பனவொன்று மேலும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ரூபா 1,191,178.12 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதாகவும் மேலும் அறவிட வேண்டிய மீதியான ரூபா 6,392.88 தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | இலக்கம் 01-600772 இன் கீழ் ஓய்வூதியம் பெற்றிருந்து 2013 நவம்பர் 07 ஆந் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரின் வங்கிக் கணக்கில் அவர் மரணமடைந்ததன் பின்னர் 29 மாத காலம் வரை ரூபா 582,423 ஓய்வூதியம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 581,916 தொகை ATM அட்டையை பயன்படுத்தி எடுக்கப்பட்டிருந்த போதும், 2021 திசெம்பர் 31 வரையிலும் அந்தப் பணம் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஓய்வூதிய இலக்கம் 600-772-01 என்ற ஓய்வூதியதாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்திற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் வழக்கு இலக்கம் B2019/25 இன் கீழ் இதுவரையில் அது விசாரணையில் காணப்பட்டதுடன் குற்றமிழைத்தவரை தீர்மானிப்பதற்கோ அல்லது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கொடுப்பனவுகள் இடம்பெறாத வகையில் மரணமடைகின்ற ஓய்வூதியதாரர்களின் தகவல்களை விரைவாக பெற்று முறைமையை நாளதுவரையாக்கும் வகையில் வேலைத்திட்டமொன் றை தயாரிக்க வேண்டியிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தரவு முறைமையின் பிரகாரம் ஓய்வூதிய இலக்கம் 105353-0-21 என்ற ஓய்வூதியதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு பதிலாக ஓய்வூதியதாரரின் மகளின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி ஓய்வூதியதாரர் மரணமடைந்து 86 மாதங்கள் கடக்கும் வரையிலும் ஓய்வூதியமாக ரூபா 1,562,470 செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பணம் அவரின் மகளால் பெறப்பட்டிருந்த போதும், இது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களோ கணக்காய்விற்கு அறிக்கையிடப்படாதிருந்ததுடன் இந்த மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையில் ரூபா 1,036,336 தொகை மேலும் அறவிடுவதற்கு காணப்பட்டது. | ஓய்வூதிய இலக்கம் 21-105355 ஓய்வூதியதாரரின் மகளால் பெறப்பட்ட பணத்தில் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய பணம் ரூபா 1,036,336 ஆகும். தற்போது அந்த மகள் மரணமடைந்திருந்தார். அந்த மேலதிக செலுத்துதல்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் போது அந்த கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிக கொடுப்பனவுகள் இடம்பெறாத வகையில் மரணமடைகின்ற ஓய்வூதியதாரர்கள் தொடர்பான தகவல்களை விரைவாகப் பெற்று முறைமையை நாளதுவரையாக்கும் வகையில் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | கல்னேவ பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய உத்தியோகத்தரால் உரித்து கோரப்படாத இராணுவ விதவைகள் கணக்கிற்கு ரூபா 1,596,640 செலவு வைக்கப்பட்டு அந்தப் பணம் ஓய்வூதிய உத்தியோகத்தரால் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒழுக்காற்று பரிசோதனைகள் மேற்கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையில் ரூபா 1,000,000 தொகை உத்தியோகத்தரால் கல்னேவ பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்தத் தொகையில் | அந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தடன் மேலதிகமாக செலுத்தப்பட்டவைகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் அறவிடுவதற்கு காணப்பட்ட பணம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | குருவிட்ட பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய தரவு முறைமையில் தரவுகளை மாற்றி நிலுவை ஓய்வூதியமாக பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த கணக்காளரினால் 2009 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 6,758,120 அவரின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பணம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய மோசடி தொடர்பாக கணக்காளரினால் பயன்படுத்தப்பட்ட கணனியின் தரவுகளை பரீட்சித்து பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்காக தற்போது அந்த 02 கணனிகளும் அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் அறிக்கை கிடைத்த பின்னர் மிகுதி விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்வதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரத்தினபுரி நீதிமன்றத்தில் ம/உ பீ 417/15 என்ற வழக்கு தொடரப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | மோசடி தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து நிதிப்பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவரிடமிருந்து ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

**2.6 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தனிப்பிட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 172,979,542 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதி ரூபா 841,174 ஆகும். அந்த மீதிகளில் 03 உத்தியோகத்தர் களின் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 747,639 தொகையும், ஒரு உத்தியோகத்தரிடமிருந்து 3-4 வருடங்களுக்கு இடையிலான மீதி | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 65,574 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 190,485 மாதாந்தம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளில் ரூபா 176,367 தொகையை மீள அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதில் ரூபா 45,639 இற்கு | உரிய நிலுவை மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 94,535 தொகையும் காணப்பட்டது. | உரிய ஓய்வூதிய திணைக்களத்தின் சட்டப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபா 328,001.54 இற்குரிய ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையும், சேவையை விட்டு வெளிநாடு சென்றிருந்த ரூபா 146,321 கடன் மீதியுடன் உத்தியோகத்தரின் வதிவிட முகவரியை கண்டறிவதில் பிரச்சினைகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2.7 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஓய்வூதிய தினத்திற்காக கிடைக்கப்பெற்ற 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,413,050 வைப்பு நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அந்த வருடங்களில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அரசாங்க விழாக்களை நடாத்துதல் நிறுத்தப்பட்டமையால் ஓய்வூதிய தினத்தை நடாத்துவதற்கு முடியாதிருந்தமையால் அந்தப் பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஓய்வூதிய தினத்திற்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைத்த நன்கொடைகளாக இருந்தமையால் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அந்தப் பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ரூபா 128,169 தொகையான வைப்புக்கள் தொடர்பாக அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள வைப்புக்களை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான கணக்கு இலக்கம் 7041643 என்ற இலங்கை வங்கிக் கணக்கு மற்றும் உள்ளூராட்சி சேவை தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான கணக்கு இலக்கம் 7041644 என்ற இலங்கை வங்கிக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப் படாமையால் அவை செயற்பாடற்ற வங்கிக் கணக்காக காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | உள்ளூராட்சி விதவைகள், அனாதைகள் நிதியக் கணக்கு மற்றும் தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியக் கணக்கிற்கு கிடைக்கின்ற பணம் விதவைகள், அனாதைகள் பங்களிப்புக் கணக்கிற்கு அனுப்புமாறு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் சில நிறுவனங்கள் சிறு தொகையினை அந்த கணக்கிற்கு செலவு வைத்திருந்தது. அதனால் அந்தக் கணக்கினை பேணிச் செல்வதற்கான தேவை ஏற்பட்டிருந்தது. | செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் மூடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2/2020 இன் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைத் திட்டம் மற்றும் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த பெறுகைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனக் கட்டமைப்பு, வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைத் திட்டம் மற்றும் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான வருடாந்த திட்டம் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டு கோவையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை அமுலில் உள்ள விதவைகள் மற்றும் அனாதைகள் புதிய பதிவு மற்றும் மீள் பதிவு செயற்பாடுகளாக இனங்காணப்படாமையால் அவற்றின் செயற்பாடுகளை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்காக வருடாந்தம் சகல பிரிவுகளினதும் தகவல்கள் பெறப்படுவதுடன் அந்த பிரிவுகள் மூலம் அவற்றில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளை இனங்கண்டு முன்னுரிமையின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தின் தேவையின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத Firewall மற்றும் Cert முறைமை தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். முன்னுரிமையின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளுக்காக ரூபா 2 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் திணைக்களத்தின் செயற்பாடுகளை வழமையான பிரகாரம் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு முடியாமையின் காரணமாக எஞ்சியிருந்த கடமைகளை விரைவாக பூர்த்தி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டதன் காரணமாக இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததை அறியத் தருகின்றோம். | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை குறித்துரைத்த பிரகாரம் பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| குறித்த செயற்திட்டமாக இனங்காணப்பட்ட மாவட்டத்தின் பிரகாரம் ஓய்வூதிய செயற் பிரிவினை இனங்காணல் மற்றும் 10 Scanner இனை தாபிக்கும் செயலாற்றல் 2021 செப்தெம்பர் வரையில் 100 சதவீதமாக காண்பிக்கப்பட்ட போதிலும் 2021 ஏப்ரல் வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 ஸ்கேன் இயந்திரங்களில் 03 இயந்திரங்கள் 2021 நவம்பர் 19 ஆந் திகதி வரையில் இரத்கம, மாதம்பாகம மற்றும் வந்துரம்ப என்ற பிரதேச செயலகங்களில் தாபிக்கப்பட்ட போதும், 07 ஸ்கேன் இயந்திரங்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் (2022.02.18) களஞ்சியப் பிரிவில் காணப்பட்டது. அதன் பிரகாரம் திசெம்பர் மாதம் வரையிலும் காண்பிக்கப்பட்டுள்ள செயலாற்றல் பெறுமதி பிழையானதாகும். | அந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டதனால் செயலாற்றல் 100 சதவீதமாக இருந்ததுடன் மிகுதி இயந்திரங்கள் தற்போது மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை சரியாக இனங்கண்டு செயலாற்றலை சரியாக கணிப்பீடு செய்தல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தற்போது தாபிக்கப்பட்டுள்ள 2021 யூன் 21 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,928,700 ஆன புதிய பாதுகாப்பு முறைமைக்காக 85 சதவீதம் கொடுப்பனவு செய்ததன் பின்னர் மிகுதியை தொழில்நுட்ப மதிப்பீட்டின் பின்னர் விடுவிப்பதாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் முறைமையின் பாதுகாப்பு இயலுமை தொடர்பாக மற்றும் வழுக்களை இனங்காணும் இயலுமை தொடர்பாகவும் தொழில்நுட்ப கணக்காய்வு மேற்கொள்ள முடியுமான ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீடின்றி 2021 ஒக்தோபர் மாதம் 11 ஆந் திகதி ரூபா 289,305 ஆன மிகுதிப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | மாதிரிகளின் பிரகாரம் சகல வசதிகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும் DMZ Zone தாபிக்கப்பட்டு முடியும் வரை 15 சதவீத பணத்தை நிறுத்தி வைப்பதற்கு தகவல் தொழில்நுட்ப மதிப்பீட்டு பிரிவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 15 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் DMZ Zone தாபித்ததன் பின்னர் தகவல் தொழில்நுட்ப பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து உறுதிப்படுத்தலை பெற்று மிகுதி 15 சதவீத பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) எதிர்வைரஸ் மென்பொருளை கொள்வனவு செய்தல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2006 இன் 3:3 பிரகாரம் கேள்வி கோரல்களில் தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர்களின் பட்டியலொன்றில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக கேள்வி கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரமும், செயலாற்றல் திட்டத்தின் பிரகாரமும் தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் முறைமையை (NCB) பின்பற்றி கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும் ''எதிர் வைரஸ் மென்பொருள் நாளதுவரையாக்குதல் 2018'' கோவையின் பிரகாரம் கூறுவிலை சமர்ப்பித்துள்ள | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2006 இன் 3.3 இன் பிரகாரம் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனங்களின் விலைகளின் வீச்சு ரூபா 420,000 - ரூபா 560,000 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ''அறிவித்தல் பிரசுரித்தல் விரயமாக கருத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லாமல் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டமை, வினைத்திறனாக பணத்தை செலவிடுமாறு கருதுகின்ற சிறிய பெறுமதியுடைய பெறுகைகளுக்காக'' ஈடுபடுத்துதல் பொருத்தமானது என்ற பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | பெறுகைகள் கைநூலில் 5.4.8 இன் பிரகாரம் 15 கணனிகளை கொள்வனவு செய்யும் போது செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | 2021 ஏப்ரல் 07 ஆந் திகதிய ஒப்பந்தம் கையளித்தல் கடிதத்தின் மூலம் செயலாற்றல் காப்புறுதி கோரப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் காணப்பட்ட Covid - 19 தொற்றுநோயினால் நிறுவனம் மூடப்பட்டமையின் காரணமாக செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக் கொள்ளல் தாமதமடைந்திருந்ததுடன் அதனிடையே 2021 ஏப்ரல் 21 வரை பொருட்கள் உரிய பிரகாரம் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2021 மே 04 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் படி மீண்டும் செயலாற்றல் காப்புறுதியை பெற வேண்டிய சகல சந்தர்ப்பங்களிலும் செயலாற்றல் காப்புறுதி சரியாக பெற்றுக்கொள்ளப்படும் என மேலும் | பெறுகைகள் வழிகாட்டி கோவை பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறியத்தருகின்றோம். | |
| (ஈ) | 15 கைவிரல் அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்தல். ரூபா 510,000 தொகையான 15 கைவிரல் அடையாள இயந்திரங்கள் களஞ்சியப் பொருள் பதிவேட்டின் பிரகாரம் 2021 ஏப்ரல் 25 ஆந் திகதி கையேற்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் (2022.02.28) அந்த 15 இயந்திரங்களும் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் பரவலினால் 2021 சனவரி மாதம் நாடு திறக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் மே மாதத்தில் கணனிகளை பகிர்ந்தளிக்கும் போது தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் தற்போது அந்த கைவிரல் அடையாள இயந்திரங்களை பகிர்ந்தளித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவுகளை விரைவாக தேவையான பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (உ) | 10 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் 15 ஸ்கேன் இயந்திரங்களின் கொள்வனவு | | |
| (i) | புதிதாக தாபிக்கப்பட்ட புதிய பிரதேச செயலகத்திற்காக தேவையான கணனி உபகரணங்களாக 09 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் 09 ஸ்கேனர் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கும், 1 அச்சிடல் இயந்திரத்தை மத்தியமயப்படுத்தல் பிரிவிற்காக கொள்வனவு செய்வதற்கும் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 06 ஸ்கேனர் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்குள்ள தேவை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | மேலதிகமாக 05 ஸ்கேனர் இயந்திரங்கள் பிரதேச செயலகங்களின் தேவையின் அடிப்படையில் வழங்குவதற்காகும். | கொள்வனவு செய்வதற்குள்ள தேவையினை இனங்கண்டு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | 15 ஸ்கேனர் இயந்திரங்கள் 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 19 ஆந் திகதி 03 இயந்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த துடன் 2021 ஆகஸ்ட் 03 ஆந் திகதி | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் பரவலினால் 2021 சனவரி மாதம் நாடு திறக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் மே மாதம் ஆரம்பத்துடன் நாடு மூட வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதேச செயலகத்தில் இருந்து | கொள்வனவுகள் விரைவாக தேவையான பணிகளுக்கு ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்திற்கு கிடைத்த 10 அச்சிடல் இயந்திரங்களில் 2021 நவம்பர் 19 ஆந் திகதி வரையில் 03 இயந்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டு 07 இயந்திரங்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | கைவிரல் அடையாள இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு வருகைதர முடியாத நிலைமை எழுந்திருந்ததன் அடிப்படையில் அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் ஸ்கேனர் இயந்திரங்களை பகிர்ந்தளிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது இந்த எஞ்சிய 12 ஸ்கேனர் இயந்திரங்களில் 02 விநியோகிக்கப் பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் ஸ்கேனர் இயந்திரங்களை விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | இதன் பிரகாரம் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நிதியேற்பாட்டுத் தொகையில் 60 சதவீதம் அதாவது ரூபா 2,642,008 பெறுமதியான உபகரணங்கள் 2022 பெப்ரவரி 28 (கணக்காய்வுத் திகதி) வரையிலும் களஞ்சியத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டமை மற்றும் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட பணிகளில் செயலாற்றலை குறைக்கும் நிலையில் காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | கொவிட் இன் காரணமாக அந்த வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் தற்போது காலி, மாத்தறை மற்றும் கண்டி என்ற மாவட்டங்களில் நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் களஞ்சியத்தில் காணப்படுகின்ற உபகரணங்கள் இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் களஞ்சியத்தில் உள்ள இயந்திர உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | கொள்வனவுகள் விரைவாக தேவையான பணிகளுக்கு மாத்திரம் ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு | ஓய்வூதியத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட | நிலையான சொத்துக்கள் உரிய பிரதேச |

| | | |
|---|---|---|
| விநியோகிக்கப்பட்ட ரூபா 775,187 தொகையான சொத்துக்களில் ரூபா 117,720 பெறுமதியான கணனி இயந்திரங்கள் செவனகல பிரதேச செயலகத்தின் புத்தகத்தில் பதியப்படாமையினால் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 657,467 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உரிய பிரதேச செயலகங்களின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப் படவில்லை. | கணனி இயந்திரங்கள் பிரதேச செயலகத்திற்காக விநியோகிக்கும் போது களஞ்சியத்தால் விநியோகிக்கும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த துடன் கிடைத்தமைக்கு பெறுவனவு கட்டளை உரிய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. | செயலகங்களில் புத்தகங்களில் குறிப்பிடப் பட்டுள்ளமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட வில்லை. |

## 3.6 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக மாவட்டச் செயலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அறிக்கைகளில் மீளாய்வாண்டின் இறுதி மீதியுடன் திணைக்களத்தால் தயாரிக்கப்படுகின்ற மீளாய்வாண்டின் இறுதி மீதி இணங்கியிருக்கவில்லை. | பிரதேச செயலகத்தினால் பின்பற்றப்படுகின்ற பல்வேறு முறைமைகளினால் மாவட்ட செயலகங்களிலிருந்து அனுப்பப்பட்ட இழப்பு நட்டம் தொடர்பான இறுதி அறிக்கையின் பிரகாரமும், திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட ஆண்டின் இறுதி இழப்பு நட்ட பதிவேடுகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதி மீதி ஒன்றுக்கொன்று சமமாக இருத்தல் வேண்டும். |

## 3.7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு ஐயவினா தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட 42 கணக்காய்வு ஐயவினாக்களில் 21 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய | மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களிலிருந்தும் பதில்கள் மற்றும் விளக்கமளித்தல்களை | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடபப்பட்ட கணக்காய்வு ஐயவினா பதிவேடு |

| | | |
|---|---|---|
| விளக்கமளித்தல்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணிப்பீடுசெய்ய முடியுமான பெறுமதி ரூபா 9,947,766 ஆக இருந்தது. | பெற்று கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் வழங்கப்பட வேண்டியமையால் காலதாமதம் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். | குறித்துரைத்த காலத்தின் பின்னர் பரீட்சிக்கப்பட்டு கிடைக்கப் பெற்றுள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்கப்பட வேண்டும். |

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஓய்வூதிய இலக்கம் 40-2015040 மற்றும் 4-30864 இன் கீழ் ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியதாரர் 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதி மீண்டும் விவாகம் செய்திருந்ததுடன் அனாதைகள் அந்த சந்தர்ப்பத்தின் போது பராயமடையாக பிள்ளையாகும். 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் மரணமடைந்த பங்களிப்பாளருக்கு பிறந்த அனாதைகள் இருக்குமாயின் அனாதைகளுக்கு அனாதைகள் ஓய்வூதியம் உரித்து பெறப்பட வேண்டியிருந்த போதும் 2019 ஒக்தோபர் 04 ஆந் திகதி முதல் 2021 யூலை மாதம் வரையும் ஓய்வூதிய இலக்கம் 40-2015040 | மீண்டும் விவாகமான விதவைக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 752,322 தொகையை அறவிடுவதற்கும், அவரின் பராயமடையாத பிள்ளைகளுக்கு உரித்தான அனாதைகளுக்குரிய ஓய்வூதியத்தை தயாரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீண்டும் விவாகமான விதவைக்கு செலுத்துதல் நிறுத்தப்பட்டு அனாதைக்கு செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 4-30864 இன் கீழ் முறையே ரூபா 598,488 மற்றும் ரூபா 153,834 தொகை மீண்டும் விவாகமான விதவைக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கெஸ்பாவ பிரதேச செயலகத்தில் மரணமடைந்த பதினொரு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 3,327,180 தொகையும், இரத்தமலானை பிரதேச செயலகத்தில் மரணமடைந்த இரண்டு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 436,967 தொகையும், கொலன்னாவ பிரதேச செயலகத்தில் மரணமடைந்த ஒரு ஓய்வூதியதாரருக்கு ஓய்வூதியமாக ரூபா 48,737 தொகையும், கொழும்பு பிரதேச செயலகத்தில் மரணமடைந்த 05 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிமாக ரூபா 2,480,951 தொகையும், ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டை பிரதேச செயலகத்தில் மரணமடைந்த ஒரு ஓய்வூதியதாரருக்கு ஓய்வூதியமாக ரூபா 797,334 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 7,091,169 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பிரதேச செயலகத்தின் மூலம் அறவிடப்பட்டுள்ள பணத்தை எதிர்காலத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பெறுமதி விரைவாக அறவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தாத வகையில் மரணமடைகின்ற ஓய்வூதியதாரர்களின் தகவல்களை விரைவாகப் பெற்று முறைமையை நாளதுவரையாக்க வேண்டியிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஓய்வூதிய இலக்கம் 21-37920 என்ற ஓய்வூதியதாரர் 1994 திசெம்பர் 01 ஆந் திகதி மரணமடைந்த போதிலும் அவருக்கு 2018 யூலை மாதம் வரை ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 2,268,080 தொகையில் | மேலும் அறவிடுவதற்குள்ள மீதி தொடர்பாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மரணமடைந்த ஓய்வூதியதாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டு மேலும் அறவிட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 231,780 தொகை வங்கியில் சேமிப்பாக இருந்தவை பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய ரூபா 2,036,300 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | குருணாகல் பிரதேச செயலகத்திற்குரியதாக 04 சந்தர்ப்பங்களின் போது நீண்டகாலமாக அறவிடப்படாத மேலதிக செலுத்துகைகள் ரூபா 159,314 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | மேலதிக கொடுப்பனவுகளை விரைவாக மீள அறவிடல் வேண்டும். |
| (உ) | பராயமடையாதவர்களின் 10 பாஸ் புத்தகங்கள் முறையாக பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாதிருந்த துடன் பெறுமதி ரூபா 801,800 ஆன வயது 18 வருடங்களை பூர்த்தி செய்த பராயமடையாத 06 பிள்ளைகளின் வங்கி பாஸ் புத்தகங்களை அவர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிக்கையில் காண்பிக்கப்பட்ட பாஸ் புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வயதை பூர்த்தி செய்த பராயமடையாதவர்களுக்கு உரிய பாஸ் புத்தகங்களை வழங்குவதற்காக அவர்களின் தகவல்கள் வங்கி மூலமும், உரிய கிராம உத்தியோகத்தர் மூலமும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான ஆவணங்களை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் வயது 18 வருடத்தை பூர்த்தி செய்துள்ள நபர்களின் பாஸ் புத்தகங்களை விரைவாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கொழும்பு பிரதேச செயலகத்தில் கழிவுப் பதிவேட்டின் பிரகாரம் 04 ஓய்வூதியதாரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 58,075 ஓய்வூதியமும், மாவத்தகம பிரதேச செயலகத்தில் கழிவுப் பதிவேட்டின் பிரகாரம் 03 ஓய்வூதிய தாரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 874,675 தொகையும் | 04 ஓய்வூதியதாரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 112,655 தொகையில் ரூபா 32,025 தொகை அறவிடப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ரூபா 22,555 தொகை பிரதேச செயலகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளதுடன் மே மாதம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படாதிருந்ததுடன் அவை அறவிடப்படாமைக்கான காரணமாக ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் அறவீடுகள் நிறுத்தப்பட்டிருந்ததாக கழிவுப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. | அனுப்புவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிகுதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | ஓய்வூதிய இலக்கம் 27-2010729 என்ற அனாதைகள் ஓய்வூதியம் பொறுப்பாளரின் கீழ் பாதுகாக்கின்ற மூன்று அனாதைகளில் மூத்த பிள்ளை 2017 செப்தெம்பர் 10 ஆந் திகதியில் வயது 18 வருடத்தை பூர்த்தி செய்திருந்த போதிலும் அவரின் கையளித்தல் பங்கான 1/3 அளவை உள்ளடக்கி மொத்தமாக ரூபா 313,937 தொகையான அனாதைகள் ஓய்வூதியப் படி பிள்ளையின் பெயரில் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | வயது 18 வருடங்களை பூர்த்தி செய்த உடன் அனாதைகளின் பெயரில் தனித்தனியாக வங்கிக் கணக்கு ஆரம்பித்து அவர்களின் கையளித்தல் பங்கு வழங்கப்படல் வேண்டும். |
| (ஏ) | விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பணம் மீள செலுத்துதல் பதிவேட்டின் பிரகாரம் விண்ணப்பங்கள் உரிய பிரிவிற்கு கிடைத்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும், செலுத்த முடியாமல் 2002 முதல் 2020 ஆம் ஆண்டு வரை காணப்படுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 235 ஆக இருந்தது. | விண்ணப்ப பத்திரங்களில் காணப்படுகின்ற பிரச்சினையான நிலைமையால் அவற்றிற்கு தீர்வு காண்பதற்கு அதிக காலம் எடுக்கின்றமையால் பணம் செலுத்துதலும் தாமதடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஐ) | ஓய்வூதியதாரர் மரணமடைந்தமையை அறிவித்தலின் தாமதத்தின் காரணமாக ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்தப் பணத்தை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 46,620 தொகையில் ரூபா 26,246.20 தொகை அறவிடப்பட்டுள்ளது. மேலும் அறவிட வேண்டிய ரூபா 20,374.39 தொகையை அறவிடுவதற்கு மீள் நினைவூட்டல் | ஓய்வூதியதாரர் மரணமடைந்தவுடன் அறிக்கை இடுவதற்கு பொருத்தமான நிர்வாக முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமையால் 2021 யூலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை ஜா-எல பிரதேச செயலகத்தில் 12 ஓய்வூதிய தாரர்களுக்குரிய ரூபா 46,620 தொகையான மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | ஜா-எல பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட 49 கோவைகளில் குறைபாடுகளை சரிசெய்வதற்காக ஜா-எல பிரதேச செயலகத்திற்கு மீள அனுப்பப்பட்ட 14 கோவைகள் 2020 ஆம் ஆண்டின் போது குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு மீண்டும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் அங்கீகரிக்கப்படாதிருந்த துடன் மாவத்தகம, மல்லவப்பிட்டி, குருணாகல் மற்றும் பூஜாபிட்டி பிரதேச செயலகங்களில் தற்காலிகமாக 19 கோவைகளுக்காகவும் அங்கீகாரம் வழங்காமை அல்லது பெறப்படாமை தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு அறிவிக்காமையினால் அவற்றின் பிரச்சினைகளை சீராக்குவதற்கு முடியாதிருந்தது. | கோவைகளின் குறைபாடுகளை சரிசெய்வதற்காக ஜா-எல பிரதேச செயலகத்திற்கு மீள அனுப்பப்பட்டுள்ளது.<br><br>மாவத்தகம பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய இலக்கம் 4-58611 கோவை அங்கீகரிக்கப்பட்டும், ஓய்வூதிய இலக்கம் 1-600421 கோவை குறைபாடுகள் உள்ளமையால் பூர்த்தி செய்து கொள்வதற்கு உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மல்லவப்பிட்டி பிரதேச செயலகத்திற்குரிய தற்காலிக கோவைகளின் குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் 2022 மார்ச் 04 ஆந் திகதி கிடைத்திருந்தது. பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>குருணாகல், மாவத்தகம பிரதேச செயலகங்களுக்குரிய தற்காலிக கோவைகளின் குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் கிடைத்துள்ளது. பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. ஓய்வூதிய இலக்கம் 21-200784 கோவை அங்கீகரித்து அனுப்பப்பட்டுள்ளது.<br><br>பூஜாபிட்டி பிரதேச செயலகத்தின் 03 | தற்காலிக கோவைகளை விரைவாக பரீட்சித்து அங்கீகரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தற்காலிக கோவைகளில் குறைபாடுகள் உள்ளமையால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 02 கோவைகள் மீண்டும் கிடைத்துள்ளது. பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஓ) | ஜா-எல பிரதேச செயலகத்திற்குரிய விதவை மரணமடைந்தமையினால் ஓய்வூதியதாரர் இருவருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 379,428 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | விதவை மரணமடைந்ததன் காரணமாக அறவிடுவதற்கு முடியாதுள்ள மீதிக்காக நிதிப்பிரமாணம் 104 இன் படி மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஔ) | ஓய்வூதிய இலக்கம் 4-30570 மற்றும் 3-1020822 என்ற ஓய்வூதியதாரர்களின் தரவுகள் முறைமையில் காண்பித்த போதிலும் பூஜாபிட்டி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான அவரின் பெயரில் கோவையொன்று காணப்படவில்லை. | அந்த கோவை செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற இரண்டு கோவைகளாக இருந்ததாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு ஓய்வூதியதாரருக்கும் உரிய தகவல்கள் தரவு முறைமையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (க) | ஓய்வூதிய இலக்கம் 4-4197 மற்றும் ஓய்வூதிய இலக்கம் 1-156780 என்ற ஓய்வூதியதாரர்களுக்கு இராணுவ சேவை சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவு படிகளுடன் ஓய்வூதியம் செலுத்தியமையின் காரணமாக முறையே ரூபா 359,650 மற்றும் ரூபா 292,575 தொகைகளாக கூட்டுமொத்தமாக ரூபா 652,225 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 1990 முதல் 2014 வரையான கணிப்பீடுகளுக்காக போதியளவான தரவுகள் காணப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மேலதிக செலுத்துதல்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் செயற்பட்டு மேலதிக செலுத்துகைகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | 02 ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியதாரரினால் உயிர்வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படா திருக்குமாயின் ஓய்வூதியம் இரண்டும் செயலிழக்கஞ் செய்யப்பட வேண்டிய போதிலும் இரண்டு ஓய்வூதியங்களை பெறுகின்ற வெளிநாட்டு ஓய்வூதிய நலனாளியின் ஒரு ஓய்வூதியம் செயற்படு நிலையிலும் (ACTIVE) மற்றையது செயற்பாடற்றதாகவும் (HOLD) காணப்பட்ட 47 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டிற்காக உயிர்வாழ்வுச் சான்றிதழ் பெறப்படாத உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் இரண்டையும் செயலிழக்கச் செய்வதற்கும், 2022 ஆம் ஆண்டிற்காக உயிர்வாழ்வுச் சான்றிதழ் கிடைக்கப் பெற்ற கோவைகளுக்காகவும் இரண்டு ஓய்வூதியங்களையும் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உயிர்வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்காமையால் இரண்டு ஓய்வூதியங்களும் செயலிழக்கச் செய்யப்படல் வேண்டும். |
| (கி) | ஓய்வூதிய இலக்கம் 23-1000021 என்பதற்குரிய அனாதைகளின் பொறுப்பாளராக 2007 முதல் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஆரம்பம் முதல் இதுவரை செலுத்தப்படாத வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 527,862 ஆகும். | பதிலளிக்கப்படவில்லை. | வாழ்க்கைச் செலவுப் படி செலுத்துதல் வேண்டும். |
| (கீ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக உயிர் வாழ்வுச் சான்றிதழ் வழங்காதிருக்கும் போது 03-1173669 என்ற ஓய்வூதிய குறியீட்டிற்குரிய ஓய்வூதியச் சம்பளம் நிறுத்தப்பட்ட திகதியான 2021 யூலை 10 வரை ரூபா 658,810.26 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | வருடாந்தம் உயிர் வாழ்வுச் சான்றிதழ் வழங்காதிருந்த ஓய்வூதியதாரரின் கொடுப்பனவுகள் விரைவாக நிறுத்தப்படல் வேண்டும். |
| (கு) | பிரதேச செயலகங்களுக்கிடையே ஓய்வூதியக் கோவை மாற்றப்பட்டிருந்த போதிலும் தரவு முறைமை நாளதுவரையாக்காமையின் காரணமாக கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியதாரர்களுக்காக 2004 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை ஓய்வூதிய | ஓய்வூதிய இலக்கம் 01-1603037 மற்றும் 01-603037 இன் கீழ் இரண்டு ஓய்வூதியங்களை பெற்று மரணமடைந்த ஓய்வூதியதாரரிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 1,847,708.85 ஆகும். அவரின் சட்ட ரீதியான மனைவியினால் விதவைகள் அனாதைகள் | ஓய்வூதியக் கோவை பிரதேச செயலகத்திற்கிடையே மாற்றுகின்ற சகல சந்தர்ப்பங்களின் போதும் தரவு முறைமை நாளதுவரையாக்க வேண்டியதை நிரந்தரமாக பரீட்சிப்புக்கு உட்படும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 01-603037 மற்றும் 01-1603037 இன் கீழ் இரண்டு ஓய்வூதியங்களும் பிழையாக செலுத்தப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104 இன் பரிசோதனையின் பிரகாரம் 2008 சனவரி முதல் 2019 திசெம்பர் வரை மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 2,169,551 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரான 41 மாத காலத்திற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓய்வூதியப் பெறுமதி கணிப்பிடப்பட்டிருக்க வில்லை. இந்த ஓய்வூதியதாரர் 2021 மார்ச் 02 ஆந் திகதி மரணமடைந்திருந்ததுடன் ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட திகதி முதல் மரணமடைந்த திகதி வரை அவரிடமிருந்து அறவிடப்பட்ட பணம் கழிக்கப்பட்டதன் பின்னர் மேலும் ரூபா 1,847,708.85 தொகை அறவிடுவதற்கு காணப்பட்டது. | சம்பளம் தயாரிப்பதற்காக விவாகச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதன் போது அந்த ஓய்வூதியதாரரின் 04 விவாகச் சான்றிதழில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. விதவைகள் அனாதைகள் உரித்து கோரியிருந்த விவாகச் சான்றிதழ் உள்ளபடியானதாக இருந்தமையால் அந்த விவாகம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததா என நீதிமன்றத்தின் மூலம் விசாரணை செய்து அறிந்து கொள்ளுமாறு பதுளை மாவட்ட பதிவாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த பிரச்சினைகளை தீர்த்து வைத்ததன் பின்னர் விதவைகள் அனாதைகள் சம்பளத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதன் போது மேற்கூறப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை விருத்தி செய்தல் வேண்டும். நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் சகல காலஎல்லைகளுக்கும் உரியதாக மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) | உயிர்வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்காமையால் 2018 யூலை மற்றும் 2019 யூன் மாதங்களின் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்த ஓய்வூதியதாரர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் இரண்டு ஓய்வூதியதாரர்கள் மற்றும் கடுவெல பிரதேச செயலகத்தில் மூன்று | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஓய்வூதிய தரவு முறைமையை விருத்தி செய்ய வேண்டியிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வூதியதாரர்கள் மரணமடைந்ததன் காரணமாக உயிர்வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை. ஓய்வூதியதாரர் மரணமடைதல் கிராம உத்தியோகத்தர் அல்லது குடும்பங்களின் உறவினர்களால் சம்பள பிரிவிற்கு அறிவிக்காமையின் காரணமாக மரணமடைந்த திகதி முதல் தலைமை அலுவலகத்தின் மூலம் ஓய்வூதியம் நிறுத்தப்படும் வரை கூட்டுப்பெறுமதி ரூபா 2,068,762 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிட்டு நிதிப்பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீண்டும் அறவிடுவதற்கு பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கெ) | இலக்கம் 1-603326 மற்றும் 21-500158 இன் மூலம் சிவில் மற்றும் அனாதைகளாக 02 ஓய்வூதியம் பெற்றிருந்த மரணமடைந்த ஓய்வூதிய உத்தியோகத்தருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 2,696,303 தொகையான ஓய்வூதியத்தில் 2020 திசெம்பர் 18 வரையிலும் அறவிடப்படாத பணம் ரூபா 2,388,251 ஆக இருந்தது. | ஓய்வூதிய இலக்கம் 01-603326 மற்றும் 21-500158 என்ற ஓய்வூதியதாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்காக கோவையிடப்பட்ட இலக்கம் 24/2019 என்ற வழக்கு விசாரணையில் காணப்படுவதுடன் தவறிழைத்தவர்களை தீர்மானிப்பதற்கோ அல்லது மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடலோ இடம்பெற்றிருக்கவில்லை. | மேலதிக செலுத்துதல்கள் இடம்பெறாத வகையில் மரணமடைகின்ற ஓய்வூதியதாரர்கள் தொடர்பான தகவல்களை பெற்று முறைமையை நாளதுவரையாக்கி இயலுமான வகையில் வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டியிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்தவர் களிடமிருந்து ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கே) | நிதிக்கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேலும் அறவிட வேண்டிய மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓய்வூதியப் பெறுமதி ரூபா 597 மில்லியனாக இருந்தது. இந்த மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 241,187 தொகையும், 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 39 மில்லியன் தொகையும் மற்றும் 05 வருடங்களுக்கு குறைவாக காலத்திற்குரிய ரூபா 558 மில்லியன் தொகையையும் உள்ளடக்கியிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டிய பணம் ரூபா 597.94 மில்லியனாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதியம் மேலதிக செலுத்துதல்கள் தாமதமின்றி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டு 2030 இன் போது நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கங்களின் கீழ் ஓய்வூதியத் திணைக்களத்தால் ஒரு நோக்கம் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. அந்த நோக்கம் தொடர்பாகவும் தெளிவான இலக்கு தாபிக்கப்படாதிருந்ததுடன் அடிப்படைத் தரவுகள் மற்றும் செயல்முன்னேற்றத்தை அளவிடும் குறிகாட்டிகள் முறையாக தாபிக்கப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக நிறுவனத்தின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் ஆர்வத்தைக் காட்டுகின்ற தரப்பினர் தொடர்பாகவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இந்த நோக்கங்களை அடைந்து கொள்ளல் ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் மாத்திரம் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் ஓய்வுபெற்று சென்றதன் பின்னர் வழங்க வேண்டிய பிரதிபலன்கள் தொடர்பாக, சமூகத்தில் சகலரையும் மேவுகை செய்யும் வகையில் விரிவான ஓய்வூதிய மேவுகை திட்டமொன்றை தயாரிப்பதற்குரிய அடிப்படை எண்ணக்கரு மற்றும் முன்மொழிவுகள் 2020 ஆம் ஆண்டின் போது ‘‘சகலருக்கும் ஓய்வூதியம்’’ முன்மொழிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த கொள்கை ரீதியான முன்மொழிவு | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அரச சேவை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அமைச்சிலிருந்து இது தொடர்பாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை பெறவேண்டியிருந்தது. | |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133(2) அ (1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வினால் நிறுவனத்தின் நிதிச்செயற்பாடுகள் தொடர்பான கட்டுப்பாட்டு முறைமைகளின் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக திணைக்களத்தில் அமுல்படுத்தப்படுகின்ற உள்ளக பரிசோதனைகளை முறையாகவும், போதியளவாகவும், தொடர்ச்சியாகவும் ஆய்வு செய்தல் மற்றும் திட்டமிடல் மற்றும் உள்ளபடியான செயல் நடவடிக்கைகளின் அடைவுகளை கண்டறிதல் வேண்டும். எனினும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஏனைய கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் இரண்டு பிரிவுகளில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோயின் காரணமாக அலுவலகம் மூடப்பட்டிருந்தமையால் நிறுவனத்தில் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் பிரதேச செயலகங்களுக்கு உரியதாக வீட்டிலிருந்து மத்தியப்படுத்தப்பட்ட தரவு முறை ஊடாக ஓய்வூதியம் செலுத்துதல் பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) தாபன விதிக்கோவையின் II அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம் பதிற்கடமை நியமனம் உள்ளபடியான பதவியை செய்யும்வரை தற்காலிக பதிலீடாக மாத்திரமாக இருந்த போதிலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பின் பிரகாரம் சிரேஷ்ட நிலையில் 03 பதவிகள் மற்றும் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள 25 ஓய்சவூதிய உத்தியோகத்தர்களுக்காக பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அந்த பதவிகளின் பதிற்கடமைக் காலம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 2 மாதங்கள் முதல் 89 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1192 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 1034 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்கள் 158 ஆக இருந்தது. உள்ளபடியான பதவியணியினரில் 01 அமைய பதவி மற்றும் 02 ஒப்பந்த பதவிகள் என்பன காணப்பட்டன. | 2021.12.31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1192 உம், சேவையில் ஈடுபடுகின்ற பதவியணியினர் 1034 உம் ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மேவுகை செய்யும் வகையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |